# 08

# கணக்கீடு

## அலகு ரீதியான மீட்டல் செயலட்டைகள்

## தரம் 12

## இலாப நோக்கமற்ற நிறுவனம்

BUSINESS & COMMERCE BRANCH

01) பின்வரும் எந்தவிடயம் விளையாட்டுக் கழகம் ஒன்றினால் தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கமாக கருதமுடியாதது.

(அ) அங்கத்துவ சந்தாக்கணக்கு
(ஆ) நிதி நிலமைக்கூற்று
(இ) திரண்ட நிதிக் கணக்கு
(ஈ) வருமான செலவுக் கணக்கு
(உ) காசுப்பாய்ச்சற் கூற்று

1. அ உம் ஆ உம்
2. அ உம் இ உம்
3. அ,ஆ,இ
4. ஆ,இ,ஈ
5. அ,இ,ஈ

02) இலாப நோக்கமற்ற நிறுவனத்தின் பின்வரும் தகவல்களை பெற்றுக் கொள்ளக்கூடிய கணக்குகளைப் பெயரிடவும்.

| தகவல் | கணக்கு |
|---|---|
| 1. ஆண்டுக்கான இனங்காணப்பட்ட சந்தாக் கட்டணம் | ____________________ |
| 2. வருடத்தினுள் காசு உட்பாய்ச்சலும் வெளிப்பாய்ச்சலும் | ____________________ |

03) 2021.03.31 ன் முடிவடையும் வருடத்திற்கான விளையாட்டுக் கழக அங்கத்துவ பணம் தொடர்பாக தகவல்கள் பின்வருமாறு

2020/2021 வருடத்தில் அங்கத்துவப் பணம் தொடர்பான தகவல்கள்

| வருடம் | ரூபா. |
|---|---|
| 2019/2020 | 12 000 |
| 2020/2021 | 75 000 |
| 2021/2022 | 8 000 |
| | 95 000 |

| | 2021.03.31 | 2020.03.31 |
|---|---|---|
| பெறவேண்டிய அங்கத்துவப்பணம் | 18 000 | 20 000 |
| முற்பண அங்கத்துவ கட்டணம் | ? | 12 000 |

2021.03.31 இன் முடிவடைந்த வருடத்திற்கான இனங்காணப்பட்ட அங்கத்துவ பண வருமானம் யாது?

04) இலாப நோக்கமற்ற நிறுவனம் தொடர்பான பின்வரும் தகவல்கள் சரியாயின் (√) என்றும் பிழையாயின் (X) என்றும் குறிப்பிடுக.

1. வருடக்கடைசியில் திரண்ட நிதி அதிகரிக்கப்பட்டது நிறுவனம் மிகை ஒன்றைப் பெற்றதைக் குறிப்பிடுகிறது. (   )

2. வருடத்தின் அங்கத்துவ வருமானம் பெறுவனவுக் கொடுப்பனவு கணக்கில் கண்டுகொள்ளலாம். (   )
3. விளையாட்டுக் கழகம் விளையாட்டு உபகரணங்களை கொள்வனவு செய்வது வருடக் கடைசியில் மொத்த சொத்து அதிகரிப்பதற்கு காரணமாகும். (   )
4. இலாப நோக்கற்ற ஒரு நிறுவனம் தனது நன்கொடைகளை அதிகரிப்பதற்காக விழாக்களை ஏற்பாடு செய்தல், விளையாட்டுக் கழகங்களுக்கிடையே போட்டிகளை ஒழுங்கு செய்வர்.(   )

05) பின்வரும் தகவல்கள் நலன்புரி சங்கத்திற்கு உரியதாகும்.

| விபரம் | 2021.03.31<br>ரூபா.000 | 2020.03.31<br>ரூபா.000 |
|---|---|---|
| காரியாலய உபகரணம் (தேறியது) | 1000 | 850 |
| அட்டுறு அங்கத்துவப்பணம் | 20 | 25 |
| வங்கிக்காசு | 60 | 60 |
| வங்கிக்கடன் | 300 | 500 |
| முற்பண அங்கத்துவப்பணம் | 15 | 10 |

தேறிய சொத்து அடிப்படையில் 2020.03.31 இன் முடிவடைந்த வருடத்திற்கான அதிகரிப்பு/ குறைவு எவ்வளவு?

1. ரூபா.340 000
2. ரூபா.425 000
3. ரூபா.(145 000)
4. ரூபா.(340 000)
5. ரூபா.(425 000)

06) பின்வரும் தகவல்கள் "ஸ்டார்" விளையாட்டு கழகத்துடன் தொடர்புடையது.

| | 2022.03.31<br>ரூபா.000 | 2021.03.31<br>ரூபா.000 |
|---|---|---|
| திரண்ட நிதி | 730 | 680 |
| ஆயுள் சந்தா நிதி | 225 | 250 |

ஆயள் சந்தாவின் 10% வருடத்திற்கான வருமாகமாக இனங்காணப்படுவது கம்பனியின் கொள்கையாகும்.

2022.03.31 இன் முடிவடைந்த வருடத்திற்கான "ஸ்டார்" விளையாட்டுக் கழகத்தின் அதிகரிப்பு / குறைவு எவ்வளவு?

1. குறைவு ரூபா.25 000
2. அதிகரிப்பு ரூபா.50 000
3. குறைவு ரூபா.50 000
4. அதிகரிப்பு ரூபா.75 000
5. குறைவு ரூபா.75 000

07) ராதா கழகத்தின் சொத்துக்களும் பொறுப்புக்களும் பின்வருமாறு

| விபரம் | 2022.03.31<br>ரூபா.000 | 2021.03.31<br>ரூபா.000 |
|---|---|---|
| காரியாலய உபகரணம்<br>(திரண்ட பெறுமதி) | 500 | 400 |
| அட்டுறு அங்கத்துவக்கட்டணம் | 50 | 60 |
| காசு மீதி | 150 | 190 |
| நீண்டகால கடன் | 200 | 300 |
| முற்பண அங்கத்துவக்கட்டணம் | 35 | 20 |

2022.03.31 இன் முடிவடைந்த வருடத்திற்கான அதிகரிப்பு / குறைவு எவ்வளவு?
(தேறிய சொத்து அடிப்படையைப் பின்பற்றவும்)

BUSINESS & COMMERCE BRANCH

1. குறைவு ரூபா.45 000
2. குறைவு ரூபா.135 000
3. அதிகரிப்பு ரூபா.135 000
4. அதிகரிப்பு ரூபா.150 000
5. அதிகரிப்பு ரூபா.465 000

08) விளையாட்டுக் கழகம் ஒன்றின் 2022.03.31 இன் முடிவடைந்த வருடத்தினுள் இருந்த அங்கத்துவர்களின் எண்ணிக்கை 150 இன் ஆகும். வருடத்துக்கான அங்கத்துவக்கட்டணம் ரூபா.5000. 2022.03.31 முடிவடைந்த வருடத்தில் கழகத்திற்கு கிடைத்த காசு பின்வருமாறு

- நிதிஆண்டுக்கான அங்கத்துவக்கட்டணம் ரூபா.500 000
- நன்கொடை ரூபா.350 000
- 2022.03.31 இல் முடிவடைந்த நிலையான வைப்பில் இருந்து பெற்ற் காசு ரூபா.875 000, இதில் ரூபா.75 000 வட்டி வருமானம் ஆவதுடன் 2021.03.31 இல் பெறப்பட வேண்டிய வட்டி வருமானமாக இனங்காணப்பட்டிருந்தது. நன்கொடைகள் முதலாம் வருடத்தில் இருந்து 5 வருட காலத்தினுள் வருமானமாக இனங்காண்பது கழகத்தின் கொள்கையாகும்.

  பின்வரும் கொடுக்கல் வாங்கலால் 2022.03.31 இன் முடிவடைந்த வருடத்திற்கான இனங்காணப்பட்ட வருமானம் மற்றும் 2022.03.31 ஆம் திகதிக்கு சொத்துக்களின் அதிகரிப்பையும் குறிப்பிடுக.

09) 2022.03.31 ஆம் திகதி ‘‘கலைமகள்’’ விளையாட்டுக் கழகத்தின் அங்கத்துவர் எண்ணிக்கை 60 ஆகும். வருடத்திற்கான அங்கத்துவர் கட்டணம் ரூபா.1200. 2022.03.31 இன் முடிவடைந்த வருடத்திற்கான அங்கத்துவ கட்டணமாக ரூபா.48 000 காசு பெறப்பட்டது. 2022.03.31 மற்றும் 2021.03.31 திகதிக்கு முன் பெறப்பட்ட அங்கத்துவ கட்டணம் முறையே ரூபா.6000, ரூபா.9000 ஆகும். பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.

1. 2022.03.31 ஆம் வருடத்திற்கான அங்கத்துவ வருமானம் யாது?

2022.03.31 அல் அட்டுறு அங்கத்துவ கட்டணம் யாது?

BUSINESS & COMMERCE BRANCH